செ.வெ.எண் : 37/ ஆகஸ்ட் நாள் : 26.08.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## 9 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிகள் திறக்கப்படுவதை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (26.08.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், 9 முதல் 12 - ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசு, கொரோனா தடுப்பு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி 01.09.2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட உள்ளது தொடர்பாக மேற்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்ககைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் உடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவத்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழகத்தில் 9 முதல் 12 - ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கொரோனா தடுப்பு நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி 01.09.2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட உள்ளது. அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் அனைத்து முனனெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் 137 அரசு பள்ளிகள், 49 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், 78 சுயநிதி பள்ளிகள் என மொத்தம் 264 பள்ளிகள் திறக்கபடஉள்ளன.

இப்பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் 8684 மாணவர்களும், 8636 மாணவிகளும், 10 ஆம் வகுப்பில் 8687 மாணவர்களும், 8563 மாணவிகளும், 11 ஆம் வகுப்பில் 7469 மாணவர்களும், 7789 மாணவிகளும், 12 ஆம் வகுப்பில் 7112 மாணவர்களும், 7813 மாணவிகளும் ஆக மொத்த 31952 மாணவர்களும், 32801 மாணவிகளும் என மொத்தம் 64,753 மாணவர்கள் உள்ளனர். இப்பள்ளிகளில் 5,745 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் 3,764 நபர்களுக்கு கொரோனா தடுக்பூசி செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆசிரியர்களுக்கும் பள்ளிகள் திறப்பதற்க்கு முன்பாக சிறப்பு முகாம்கள் நடத்தி தடுப்பூசி செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளபபட்டுள்ளது.

நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி நிர்வாகம் சார்ந்த அலுவலகங்கள் தங்கள் பகுதிகுட்பட்ட பள்ளி வளாகங்கள் மற்றும் வகுப்பறைகளில் கிருமிநாசினி தெளித்து சுத்தம் செய்திட வேண்டும். பள்ளி நுழைவாயுலில் உடல் வெப்பநிலை பரிசோதனை கருவி மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பரிசோதித்து உறுதி செய்த பின்னரே அனுமதித்திட வேண்டும். பரிசோதனையின் போது யாருக்காவது உடல் வெப்பநிலை அதிகரித்துள்ளது என கண்டறியப்பட்டால் உடனடியாக அவர்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்க சுகாதார துறை அலுவலர்கள் தயர்நிலையில் இருந்திடவேண்டும்.

மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிவதையும், வகுப்பறையில் போதிய சமூக இடைவெளி கடைபிடிக்கபடுவதையும் உறுதிசெய்திட வேண்டும். அதைபோல மாணவ, மாணவியர்கள் தங்களின் கைகளை சுத்தமாக பராமரிக்க ஏதுவாக போதிய கிரிமிநாசினி / சோப்பு மற்றும் தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை சம்மந்தப்பட்ட பள்ளி நிர்வாகம் உறுதிசெய்திட வேண்டும். அந்த வகையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அரசு வழங்கி உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி )திரு.கே.ஜே. பிராவின் குமார் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.ம. காமாட்சி கனேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. ம.க.செ.சுபாசினி, சுகாதாரதுறை துணை இயக்குநர்கள் மரு.குமருகுருபரன் (இராமநாதபுரம்), மரு.ஐ.இரவீந்திரன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**